தி ராமராஜு சர்ஜிகல் காட்டன் மில்ஸ் லிமிடெட பதிவு அலுவலகம் :
ராமராஜு சர்ஜிகல் காட்டன் மில்ஸ் வளாகம்,
பி.ஏ.சி. ராமசாமி ராஜா சாலை, தபால் பெட்டி எண்.2 இராஜபாளையம் - 626 117
நிறுவனத்தின் அடையாள எண்: U17111TN1939PLC002302
தொலைபேசி : 04563 235904 தொலைநகல் : 04563 235714
E-mail : rscm@ramcotex.com
Website: http://www.ramarajusurgical.com

## பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

கம்பெனியின் 77வது வருடாந்திர பொதுக்கூட்டம் 10-08-2017 வியாழக்கிழமை, காலை 09.30 மணிக்கு P.A.C.ராமசாமி ராஜா நூற்றாண்டு நினைவு சமூகக்கூடம், சுதர்சன் கார்டன்ஸ், P.A.C.ராமசாமி ராஜா சாலை, ராஜபாளையம் - 626 108 என்ற முகவரியில் 04-06-2017 தேதியிட்ட நோட்டிஸில் கண்டுள்ள வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நடைபெற உள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்த அறிவிப்பு அனைத்து உறுப்பினர்களுக்கும் அவர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு தனித்தனியே 15-07-2017 அன்றும் மற்றும் மின்னஞ்சல் மூலமாக 17-07-2017 அன்றும் அனுப்பபட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள கம்பெனியின் இணையதளத்திலும் நோட்டிஸ் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்சொன்ன நோட்டிஸில் குறிப்பிட்டுள்ள தீர்மானங்கள் மீது வாக்களிப்பதற்கு மின்னனு வாக்குப்பதிவு வசதியை கம்பெனி அளித்துள்ளது. மின்னனு வாக்குப்பதிவு 6 ஆகஸ்ட் 2017 (காலை 9.00 மணி) முதல் தொடங்கி 9 ஆகஸ்ட் 2017 (மாலை 5.00 மணி) முடிவடைகிறது. வாக்களிக்கத் தகுதியானவர்களுக்கு cut off தேதியாக வெள்ளிக்கிழமை, 4 ஆகஸ்ட் 2017 உள்ளது.

வருடாந்திர பொதுக்கூட்ட நோட்டிஸ் அனுப்பிய பிறகு, ஆனால் cut off தேதிக்கு முன்பாக உறுப்பினர்களான நபர்கள் கீழ்கண்ட முறையில் ஏதெனும் ஒன்றை வாக்களிக்க பயன்படுத்தலாம்:

a. CDSL க்கு 16 இலக்க Beneficiary ID, NSDL க்கு 8 இலக்க DP ID மற்றும் 8 இலக்க client ID மற்றும் physical வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்களுக்கான Folio எண்ணை, அவர்களின் Login ID யாகவும் மற்றும் PAN எண்ணை Password ஆகவும் பயன்படுத்தலாம்.

b. ரிமோட் மின்னனு வாக்குப்பதிவிற்கு ஏற்கனவே பதிவு செய்த உறுப்பினர்கள் அவர்களது தற்பொதைய Login ID மற்றும் Password ஐ இதற்கு பயன்படுத்தலாம்.

c. மற்றவர்கள் ரிமோட் மின்னனு வாக்குப்பதிவிற்கு Login ID மற்றும் Password பெற கம்பெனியின் rscm@ramcotex.com க்கு இமெயில் அனுப்பி அவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் மின்னனு வாக்குப்பதிவு அனுமதிக்கப்பட மாட்டாது.

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ஆஜராகும் உறுப்பினர்கள் ரிமோட் மின்னனு வாக்குப்பதிவில் வாக்களிக்காத பட்சத்தில் கம்பெனியினால் அளிக்கப்படும் மின்னனு வாக்குப்பதிவு முறை அல்லது வாக்கு சீட்டு மூலம் தீர்மானங்கள் மீது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்கு அளிக்கலாம்.

ரிமோட் மின்னனு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் கூட்டத்தில் மறுபடியும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்.

Cutoff தேதியன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனுள்ள உரிமையாளர்கள் பதிவேட்டில் பதிவாகியிருக்கும் பெயர்களில் உள்ளவர்கள் மட்டுமே ரிமோட் மின்னனு அல்லது பொதுக்கூட்டத்தில் வாக்குபதிவு செய்யும் உரிமையை பெறுவர்.

மின்னனு வாக்குபதிவு தொடர்பாக ஏதேனும் சந்தேகம் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அது குறித்து www.evotingindia.com ல் உள்ள மின்னனு வாக்குபதிவு உபயோக கையேட்டை பார்வையிடலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு இமெயில் அனுப்பலாம். மின்னனு வாக்குப்பதிவு வசதி தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருப்பின் அது குறித்து Mr.Rakesh Dalvi, துணை மேலாளர், CDSL, 17வது தளம், பிஜே டவர்ஸ், தலால் தெரு, கோட்டை, மும்பை – 400 001 மற்றும் இமெயில் rakeshd@cdslindia.com; Toll free No.1800-200-5588 அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

வங்கி கணக்குகள், முகவரி மாற்றம், இமெயில் ஐடி, மொபைல் நம்பர் மற்றும் வாரிசுதாரர் குறித்த விபரங்களை அளிக்காத உறுப்பினர்கள், டெபாசிட்டரி பார்டிசிபேண்ட்ஸ்க்கு(Demat Shares)/கம்பெனிக்கு(Physical Shares) தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தி ராமராஜு சர்ஜிகல் காட்டன் மில்ஸ் லிமிடெட்டிற்காக,

இராஜபாளையம்
24-07-2017

அ. ஏமராஜன்
கம்பெனி செயலாளர்